6. அறிக்கை அளித்தல் — தொடர்ச்சி.

(இ) விவசாயிகளுக்கான மின் இணைப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, பேரவை விதி 82ன் கீழ் மாண்புமிகு மின்சாரததுறை அமைச்சர் அவர்கள் அவைக்கு ஒரு அறிக்கையை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கடந்த 13—3—79 அன்று இந்த மாமன்றத்தில் விவசாய மின் இணைப்புக்கள் துண்டிப்பது 3—4—79 வரை ஒத்திப் போடப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர்.

இந்த அறிவிப்பினை ஒட்டி விவசாய பெருங்குடி மக்கள் அரசின் வேண்டுகோளை ஏற்று பெருமளவில் மின்கட்டணத்தை செலுத்தியுள்ளது வரவேற்கத்தக்கது; மகிழ்ச்சிக்குரியது.

இதுவரையில் சுமார் 34,000 விவசாயிகள் மின் கட்டணத்தை நிலுவைதாரர்களாயிருந்தும் கட்டியுள்ளனர். விவசாயிகளின் இந்த நல்லெண்ணத்தையும், ஒத்துழைப்பையும் கருத்தில் கொண்டும், மேலும் அவர்கள் மின் கட்டணத்தை செலுத்துவதற்கேற்ற வாய்ப்பை அதிகரிக்கவும் விவசாயப் பயிருக்கு எவ்வகையிலும் குந்தகம் ஏற்படாது இருக்கவும், விவசாய மின் துண்டிப்பை மேலும் 4-4-79லிருந்து 30-4-79 வரை தள்ளிப்போட அரசு தீர்மானித்துள்ளது.

சேலம் மாவட்டத்தில் மின் துண்டிப்பு சம்பந்தப்பட்ட போராட்டத்தில் ஈடுபட்டு கைது செய்யப்பட்ட வன்முறையில் சம்பந்தப்படாத அனைத்து விவசாயிகளையும் விடுதலை செய்வது என்று அரசு முடிவு செய்துள்ளது.

அரசின் இந்த நல்ல அறிவிப்பை விவசாய பெருங்குடி மக்கள் பயன்படுத்தி கட்டணத்தை செலுத்த வேண்டும் என்றும் தொடர்ந்து அரசுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மாலை 4 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-40 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

1979 மார்ச் 31]

மாலை 4.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

(6) அறிக்கை அளித்தல்—தொடர்ச்சி

(ஈ) வழக்கறிஞர்கள் போராட்டம்—நீதிபதி நியமனம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதி 82 இன் கீழ் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்கள் ஒரு அறிக்கையினை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு வாரங்களாக நடைபெற்று வரும் வழக்கறிஞர்களின் போராட்டம் உடனடியாக முடிவுக்கு வரவேண்டும் என்ற பேரவாவின் அடிப்படையிலும் நீதி கோரி வழக்குமன்றம் சென்ற மக்கள் வேதனையும் விரக்தியும் அடைவதுமான சூழ்நிலையை உடனடியாக போக்க வேண்டும் என்ற அவாவின் காரணமாகவும், 27-3-79 அன்று நீதி விசாரணை நடத்த முடிவெடுத்து, அந்த முடிவின் அடிப்படையில் ஓய்வு பெற்ற மாவட்ட செஷன்ஸ் நீதிபதி திரு. டி. எஸ். அனவரதன் அவர்களை நியமித்தது குறித்தும் ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

ஆனால் முன்னாள் நீதிபதி திரு. டி. எஸ். அனவரதன் அவர்கள், தன் நியமனத்தின் மீது எழுந்துள்ள பல்வேறு விதமான கருத்துக்களின் காரணமாக, இப்பிரச்சினையில் தான் நீதிபதியாக இருந்து நீதி விசாரணை செய்யும் பொறுப்பினை ஏற்றுக் கொள்ள இயலாது என அரசுக்கு தெரிவித்துள்ளார்.

எனவே, அவரது இந்த கருத்தினை ஏற்றுக் கொண்டு, அவருக்கு பதிலாக இது சம்பந்தமாக நீதி விசாரணை செய்வதற்காக உயர் நீதிமன்ற நீதிபதி திரு. சி. ஜே. ஆர். பால் அவர்களை நியமிப்பது என இவ்வரசு முடிவு செய்துள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசின் இந்த முடிவினை ஒருமனதாக ஏற்றுக் கொண்டு வழக்கறிஞர்கள் தங்கள் போராட்டத்தை கைவிட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.